திரு. ஆ. வெள்ளைச்சாமி : இப்படி பல ஜாதிப் பெயர்களால் உள்ள தெருக்களால் ஏற்படுகிற குழப்பத்தை நீக்குவதற்காக தற்போது தபால் அலுவலகத்தில் பின்கோட் கொடுத்திருப்பதைப் போன்று தெருக்களுக்கும் எண்ணிக்கை கொடுக்கும் ஒரு புதிய முறையை புகுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படி எண்ணிக்கை கொடுத்தாலும் கூட சிரமம் இருக்கிறது. மாநகராட்சியில் பல்லாயிரக் கணக்கான தெருக்கள் இருக்கின்றன. ஆகவே எண் கொடுத்தாலும் கூட சிரமம் ஏற்படும்.

உணவு கலப்படத் தடை சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு சேய்யப்பட்டோர் எண்ணிக்கை.

*வினா எண். 572—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1—1—1980 முதல் 1—1—1981 வரை கலப்படத் தடை சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழகத்தில் 1—1—1980 முதல் 1—1—1981 வரை உணவு கலப்படத் தடை சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை—1,858.

(ஆ) அவர்களுள் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை—728.

பனைமரத்துப்பட்டியில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண். 573—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பனைமரத்துப்பட்டியில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு பொது மக்களால் ரூ. 10,000 (பத்தாயிரம்) செலுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

1982 மார்ச் 20]

(ஆ) ஆம் எனில், மருத்துவமனை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இங்கு மருத்துவமனை கட்டுவதற்கு ஆன நிலத்தை மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்யும் பணிகள் வருவாய் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலம் மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்தவுடன் மருத்துவமனை கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மருத்துவமனை கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பனைமரத்துப்பட்டியில் ஒரு அரசு மருத்துவமனை வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. எனவே விரைவில் அத்திட்டத்தைச் செயல்படுத்தி அங்கே ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பனைமரத்துப் பட்டியில் இப்போது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அது பாமிலி ப்ளானிங் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொது மக்கள் ரூ. 10,000 கொடுத்திருக்கிறார்கள். 3·32 ஏக்கர் நிலமும் 18—6—1970-ல் ரெவன்யூ டிவிஷன் ஆபீஸரால் நம் இலாகாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் தேவை, மிச்ச நிலம் இ. இ. (பி. டப்ளியூ. டி.) ஆல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் கிடைத்திருக்கிறது, ரூ.10,000-ம் கிடைத்திருக்கிறது. ஆகவே விரைவில் அதைப் பூர்த்தி செய்து செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : அரசு மருத்துவமனை கட்டுவதற்கு காலதாமதமானாலும் கூட அங்குள்ள அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அப் கிரேட் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது அந்த ஆரம்ப சுகாதார நிலையம் பாமிலிப்ளானிங் பில்டிங்கில் இருக்கிறது. அதற்கு ஒரு நல்ல கட்டடம் கட்டிமுடித்தபிறகு அதை விரிவுபடுத்தும் பிரச்சினை பற்றி சிந்திக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் ரூ. 10,000-ம் கட்டி மூன்று ஏக்கர்நிலமும் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஐந்து ஏக்கர்கள் வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ரூ. 10,000-ம் ஐந்து ஏக்கரும் கொடுத்தும் மருத்துவமனை கட்டப்படாத இடங்கள் இருக்கிறதா? அப்படி கொடுத்தால் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து மருத்துவமனைகள் நிறுவ வழிவகை செய்யப்படுமா ?

[1982 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அப்படிப்பட்ட வாய்ப்புகள் அரசாங்கத்திற்குத் தரப்படுமானால் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத தெரிவிததுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ரூ. 10,000 கொடுததார்கள் ; 3 ஏக்கர் நிலம் கொடுததார்கள் என்று சொல்லுகிறார்கள். சேலம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் ; மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அவர்களால் அந்த அளவுக்கு கொடுத்த பிறகு, 2 ஏக்கர் நிலத்தை மக்களின் நல்வாழ்வைக் கருதி அரசாங்கததாலே விலை கொடுத்து இதைச் செய்யக் கூடாதா ? பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இவ்வளவுதான் அவர்களால் கொடுக்க முடியும் என்ற ஒரு நிலைமை வந்த பிறகு, 1970ஆம் ஆண்டு முதல் இன்றைக்கு 1982வரை அதாவது 12 ஆண்டுகள் காலம் தாழ்ததிக் கொண்டிருப்பதா ? அரசாங்கத்தின் சார்பிலே அங்கே மருத்துவமனை கட்டப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்துப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஆனால், இதிலே எவ்வித பாரபட்சமும் இல்லை. அங்கே இருக்கக் கூடிய பிரச்னையெல்லாம், நில ஆர்ஜிதம் செய்வதைப் பற்றி நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று எண்ணுகிறேன். 18—6—1970 அன்று ஆர். டி. ஓ. ஆர்ஜிதம் செய்ய வந்தபோது, அதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டது, நில ஆர்ஜிதம் என்றவுடன், அது அவ்வளவு இலேசான காரியமல்ல ; உடனே கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். 5 ஏக்கர் நிலம் இருந்தால்தான் அங்கே மருத்துவமனை கட்ட முடியும். ஆனால், இப்போது அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாடு கட்டிடத்தில் தற்போது இயங்கிக்கொண்டு வருகிறது. அதற்கென்று ஒரு மருததுவமனை இருக்க வேண்டுமென்பதற்காக 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, விரைவில் கட்டி முடிக்கப்படும்.

குழந்தைகளை தாக்கும் போலி நோய் :

*வினா எண்—574 திரு. பம்பல் நல்லதம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளை தாக்கும் போலியோ எனப்படும் நோய் சென்னை நகரிலிருந்து, கிராமப் பகுதிகளுக்கும் பரவி வருவதை அரசு அறியுமா ?